## முதலாம் ஆண்டு - முதல் பருவம்
## பாடக்குறியீடு எண் 711T
## பொதுத்தமிழ் தாள் -1 தற்காலக் கவிதையும் உரைநடையும்
## அலகு-1 செய்யுள் பகுதி (கவிதைகள்)

**யாப்பு இலக்கண அமைப்புடன் எழுதப்பட்ட மரபுக்கவிதைகள் முதலில் கூறப்பட்டுள்ளன.**

1. **நிலாவும் வான்மீனும் காற்றும் என்னும் பாரதியாரின் கவிதையில் இரவில் தோன்றும் நிலாவையும் வான்மீனையும் காற்றையும் இரசித்துப் பாடியுள்ளார் மேலும் காற்று தரும் பலவகை ஒசைகள் குறித்தும் விளக்கியுள்ளார்**
2. **பாரதிதாசனின்** தோழனே உன்னிடம் சொல்வேன் என்னும் கவிதையில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளின் சிறப்பும் பொங்கலிடும் முறையும் பற்றி விளக்குகிறார்
3. காந்தியக் கவிஞரான வெ. இராமலிங்கனார் உலகம் வாழ்க என்னும் தலைப்பின் மூலம் காந்தியடிகளின் சிறப்புகளையும் பெருமைகளையும் எடுத்துரைக்கிறார்

4கோடிக்கால் பூதமடா என்னும் கவிதையின் மூலம் ப.ஜீவானந்தம் அவர்கள் தொழிலாளர்களின் கோபத்தின் வடிவமாக மாறிவிடுகிறான் கோடிக்கால்கருடன் அந்தப்பூதம் நடந்து வரும் என்கிறார்

5 முடியரசன் தலைமை வகிப்போம் என்ற கவிதையில் நாட்டைச் சீர்படுத்திச் சிறந்த நாடாக உருவாக்க வேண்டிய வழிவகைகளைப் பாடியுள்ளார் அதற்கு தமிழர் அனைவருமே தலைவனாகச் செயல்பட வேண்டும் என்கிறார்

6. கண்ணதாசனின் புதியதோர் உலகு செய்வோம் என்னும் கவிதை தமிழர்களைப்பற்றியும் தமிழர்களின் நாடு பற்றியும் மிக எளிமையாகப் போற்றுகிறது
7. தேசப் பிதாவுக்கு தெருப்பாடகனின் அஞ்சலி என்ற புதுக்கவிதையினை கவிஞர் மு. மேத்தர் படைத்துள்ளார் இந்தியா விடுதலை பெற்று இருபத்தைந்தாண்டுக் கொண்டாட்டத்தில் பாடப்பட்டகவிதை இதில் அன்றைய சூழலில் இந்தியாவின் நிலை குறித்து விளக்கியுள்ளார் மக்களிடமிருந்து பணம் கறக்கும் வித்தையை அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் அறிந்து வைத்திருக்கிறார்கள் என்கிறார்

8.கவிஞர் அப்துல் ரகுமான் அவர்கள் தனது கவிதையில் மனிதன் ஒரு பறவைக் குஞ்சுபோல் வலிமையற்றிருந்தான் பூமிக்கூட்டில் அவன் ஒரு குஞ்சு தனது கடின உழைப்பால் அவன் நரகத்தையும் சொர்க்கமாக்கி அவனுக்கு பணியாதவற்றையும் பணிய வைக்கின்றான் என்கிறார்

9. காதலோ காதல் என்ற கவிதையில் கவிஞர் மீரா விலைவாசி உயர்வு பற்றி கூறியுள்ளார்
10. மரங்களைப் பாடுவேன் என வைரமுத்து மரங்களின் பெருமைகளைப் பாடியுள்ளார்

அலகு 2 உரைநடை

எண்ணங்கள் என்றும் உரைநடைநூலில் எம் எஸ் உதயமூர்த்தி 31 தலைப்புகளில் மனித மனத்தின் எண்ணங்கள் குறித்து விளக்கியுள்ளார்

சரியான எண்ணங்களை வளர்த்துவிட்டால் வாழ்வு மகிழ்வுடன் அமையும் வெற்றியால் நிறையும் சாதனைகள் சிறக்கும் என்கிறார்

அலகு 3 இலக்கணம்

தமிழ் மொழியில் உள்ள ஐந்திலக்கணத்தில் எழுத்திலக்கணம் இதில் கூறப்பட்டுள்ளது

மொழி முதல் காரணமாம் அனுத்திரன் ஒலி எழுத்து முதல் சார்பு என இரு வகைத்தே (நன்னூல்)

மொழிக்கு முதல் காரணமாக அமைகின்ற அனுத்திரளின்

காரியமாகிய ஒலியே எழுத்தாகும் அது இருவகைப்படும்

1. முதலெழுத்துக்கள்
2. சார்பெழுத்துக்கள்

முதலெழுத்துக்கள்

உயிரும் உடம்புமாம் முப்பது முதலே (நண்)

உயிர் -12 மெய் 18 ஆகிய 30 எழுத்துக்களும் தமிழ்மொழிக்கு முதன்மையான எழுத்துக்கள் ஆகும்

சார்பெழுத்துக்கள்

முதலெழுத்தாகிய உயிரெழுத்தையும் மெய்யெழுத்தையும் சார்ந்து தோன்றும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள்

அவற்றினை தொல்காப்பியர் 3 என்கிறார் நன்னூலார் 10 என்கிறார் அவை

1 உயிர் மெய் 2 ஆயுதம் 3 உயிரளபெடை 4 ஒற்றளபெடை குற்றியலிகரம் குற்றியலுகரம் ஐகாரக்குறுக்கம் ஔகாரக்குறுக்கம் மகரக்குறுக்கம் ஆய்தக்குறுக்கம்

மொழிமுதல் எழுத்துக்கள்

பன்னீர் உயிரும் கசதந பமவய ஞங ஈகரந்து உயிர்மெய்யும் மொழிமுதல் (நன்) உயிர் பன்னிரண்டும் கசதநபமவயஞங ஆகிய 10 உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும் என்கிறார் நன்னூலார்

மொழி இறுதி எழுத்துக்கள்

ஆவி ஞணநமன யரல வழளமெய் உயிர் பன்னிரண்டும் தனித்தும் மெய் எழுத்தோடு சேர்ந்தும் எழுத்துக்களும் குற்றியலுகரமும் மொழிக்கு இறுதியில் வரும்

மெய்ம்மயக்கம்

வேற்றுநிலை மெய்ம்மயக்கம் உடனிலை மெய்ம் என்று இடைனிலை மயக்கம் இரண்டும் வகைப்படும்

ஒரு மெய்யுடன் வேறுமெய் வந்து மயங்குவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

எ.கா திங்கள்

அம்மெய்க்கு முன் அம்மெய்யெ வந்து மயங்குவது உடனிலை மெய்ம்மயக்கம்

எ.கா அக்கம்

அலகு-4 இலக்கிய வரலாறு

மரபுக்கவிதையின் வளர்ச்சி தமிழ்மொழியில் தமிழன் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்தே தொடங்குகிறது இருபதாம் நூற்றாண்டில் மரபுக்கவிதையின் வளர்ச்சி அதி வேகமானது

புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்

கவிதையின் தொடர்ச்சியாக யாப்பு வடிவமின்றி அல்லது வடிவ அமைப்பில் முற்றிலும் மாறுபட்டு அமைவது புதுக்கவிதை

புதுக்கவிதையின் தோற்றத்திற்கு பாரதியாரே அடிக்கல் நாட்டியவர் பாரதிக்குப் பின் புதுமைப்பித்தவன் புதுக்கவிதையைத் தொடர்ந்தார்

உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும்

உரைநடை என்பது பாட்டுக்கு அமைந்த இலக்கண வரம்பின்றி எளிமையாக ஒளிவுமறைவின்றி எழுதவும் பேசவும் பயன்படும் ஒன்று ஐரோப்பியர் உறவும் அச்சுப்பொறி வரவும் தமிழில் உரைநடை வளர்ச்சியின் வேகத்தை அதிகரித்தது

அலகு 5 படைப்பிலக்கியம் (பொதுக்கட்டுரை படைத்தல்)

ஒரு கட்டுரை எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் என்பதை விளக்கும் பகுதியாகும்

1. ஒரு பொருளைப் பற்றிய கருத்து ஒருமைப்பாடு
2. கருத்துக்கேற்ற பத்தி அமைப்பு அமைத்தல்
3. கட்டுரைக்குத் தேவையான அளவு மேற்க்கோள்கள்
4 முன்னுரைப்பகுதி உடல்பகுதி நிறைவுப் பகுதி அமைத்து எழுதுதல்